**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08-ம் நாள் திங்கள்கிழமை

**IA No.01/2025**

**In**

**O.S No.108/2024**

S. ரெத்தினம் (பொதுக்குடும்ப
மேலாளர் என்ற முறையில்) **......மனுதாரர்/வாதி**

**//எதிர்//**

K. ஜெயபால் **......எதிர்மனுதாரர்//பிரதிவாதி**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.P.லோகநாதன்.,B.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பத்மநாமன்.,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 06 விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இந்த அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் அசல் பிராதில் பிரதிவாதியின் பெயர் ஜெயபாலன் என்பதற்கு பதிலாக ஜெயபால் என தவறுதலாகவும், அசல் பிராது பாரா 2-ல் 6-வது வரிசையில் கண்டுள்ள சங்கதிகளில் "வாதியின் தாத்தா கடந்த 27.05.1998-ம் தேதியில் இறந்துவிட்டார் என்பதற்கு பதிலாக 2006 என்று தவறுதலாகவும்,

வழக்கு பாரா 3-ல் முதல் வரிசையில் பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஜெயசித்ரா-1 என்பதற்கு 2-வது வரிசையில் ஜெயபாலன்-2 பதிலாக சித்ரா என தவறுதலாகவும், என்பதற்கு பதிலாக ஜெயபால் என தவறுதலாகவும், 3-வது வரிசையில் "அதில் உமாமகேஸ்வரி திருமணம் ஆகி இறந்துவிட்டார் என்பதற்கு பதிலாக திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார் என தவறுதலாகவும் ஏற்பட்டுவிட்டது. மேற்படி தவறுகள் தட்டச்சு பிழை காரணமாக ஏற்பட்டுள்ளது. எனவே, மனுவில் கண்ட விபரப்படிக்கு அசல் பிராதை திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் தட்டச்சுப்பிழை ஏற்பட்டுவிட்டதாக திருத்தம் செய்ய தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல எனவும், மனுதாரர் வழக்கின் தோதிற்காக திருத்தம் செய்ய தாக்கல் செய்த இம்மனு சட்டப்பிசக்கானது எனவும், எனவே மனுதாரரின் இந்த மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் வழக்குரை பத்தி 2 ஆறாவது வரிசையில் கண்டுள்ள சங்கதிகளில் வாதியின் தாத்தா 27.05.1998 ம் தேதி இறந்துவிட்டார் என்பதற்கு பதிலாக 2006 என தவறுதலாகவும், வழக்குரை பத்தி 3 ல் முதல் வரிசையில் பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஜெயசித்ரா - 1 என்பதற்கு பதிலாக சித்ரா என தவறுதலாகவும், 2 வது வரிசையில் ஜெயபாலன் - 2 என்பதற்கு பதிலாக ஜெயபால் என தவறுதலாகவும், 3 வது வரிசையில் உமா மகேஸ்வரி திருமணமாகி இறந்துவிட்டார் என்பதற்கு பதிலாக திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார் என தவறுதலாகவும் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி தவறுகள் தட்டச்சு பிழை காரணமாக ஏற்பட்டது என்றும், அந்த விபரம் தற்போது தான் தெரியவந்தது என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் வழக்கு தாக்கல் செய்யும்போது வாதி தரப்பில் கவனக்குறைவாக இருந்துவிட்டு தற்போது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

தாவா வழக்கு விசாரணை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. தாவா வழக்கானது வழக்கெழு வினா வனையவதற்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர் திருத்தம் செய்ய கோரும் விபரங்கள் தட்டச்சு பிழையை நிவர்த்தி செய்வதற்காக என்பதாலும், மேற்படி திருத்தத்தை அனுமதிப்பதால் வழக்கின் தன்மை எந்த விதத்திலும்

மாறிவிடாது என்பதாலும், வழக்கு விசாரணை இன்னும் ஆரம்பிக்கடாத நிலையில் மேற்படி திருத்தம் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2025.12.08 16:16:49 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No. 01/2025**
**O.S.No. 108/2024**
**நாள். 08.12.2025**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**